# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044– 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 149/மாநகராட்சி/2019**

**நாள் : 29/12/2021**

**திரு S. திருவேங்கடம்,**
**சென்னை – 600 032.. – முறையீட்டு மனுதாரர்**

1) **ஆணையர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**

2) **செயற்பொறியாளர், மண்டலம் – 13,**
**பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர் மனுதாரர்கள்**

சென்னை, ஈக்காட்டுத் தாங்கல், கலைமகள் நகர், 1வது மெயின் ரோடு, எண்.36, என்ற முகவரியில் வசிக்கும் திரு எஸ். திருவேங்கடம் என்பவரது 14.09.2019 நாளிட்ட மனு 18.09.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு முறையீட்டு மனு எண்.149/மா/2019 என எண்ணிடப்பட்டு அறிக்கைகள் பெறப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

முறையீட்டு மனுதாரர் தனது 14.09.2019 நாளிட்ட முறையீட்ட மனுவில், சென்னை–20, பத்மநாபா நகர் 3–வது தெரு, கதவு எண்.2/23, என்ற மனையில் M/s. சங்கர் ஐ.ஏ.எஸ். அகாடமி கட்டடம் கட்டுவதற்கு பெறப்பட்ட கட்டிட அனுமதிக்கு மாறாக விதிமுறைகளுக்கு முரணாக இரண்டு மாடி வரை கட்டிடம் கட்ட அனுமதி பெற்று மூன்றாவது மாடியும் கட்டியுள்ளார் என்றும், குடியிருப்புக்கென அங்கீகாரம் பெற்று தற்பொழுது வணிக பயன்பாட்டிற்கு உபயோகப் படுத்தப்பட்டு வருகிறதென்றும், M/s. சங்கர் ஐ.ஏ.எஸ். அகாடமி மேற்படி அனுமதியற்ற கட்டிடத்தை வரைமுறைப்படுத்தக்கோரி அரசு செயலரிடம் முறையீடு செய்துள்ளது என்றும், அரசு செயலரின் கடிதம் எண்.24554/UDVII(2) 2016/4, நாள் 28.02.2017 ன் படி மேற்படி குறைபாடுகளை நிவர்த்தி செய்ய 6 மாத காலம் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி காலக்கெடு 28.08.2017 உடன் முடிவடைந்து விட்டது என்றும், பெருநகர சென்னை மாநகராட்சி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் இக்கட்டிடத்தை மூடி முத்திரையிட மாநகராட்சி அலுவலர்களுக்கு ஆணையிடக்கோரியுள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 25.09.2019 நாளிட்ட அறிவிப்பாணையில், முறையீட்டு மனு மீதான அறிக்கையினை சமர்ப்பிக்க, பெருநகர சென்னை மாநகராட்சி 13வது மண்டல அலுவலருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி பெருநகர சென்னை மாநகராட்சி 13 வது மண்டல அலுவலர் தனது 18.11.2019 நாளிட்ட அறிக்கையில், முறையீட்டு மனுதாரரின் புகார் மனுவில் தெரிவித்துள்ள கட்டிடம் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோர் 23.03.2016 அன்று ஆய்வு செய்து. அக்கட்டிடத்தின் உரிமையாளருக்கு மேற்படி கட்டிடத்திற்கான கட்டிட அங்கீகார வரைபடத்தினை வழங்கக்கோரி தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971ன் பிரிவு 56 மற்றும் 57ன் படி அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதென்றும், கட்டிட அங்கீகாரம் வரைபடம் கட்டிட உரிமையாளரால் வழங்கப்பட்டதென்றும், அதனைத் தொடர்ந்து அக்கட்டிடம் ஆய்வு செய்யப்பட்டு கட்டிட கட்டுமான விதிமீறல் மற்றும் அனுமதியின்றி மூன்றாவது மாடி கட்டப்பட்டுள்ளது என கண்டறியப்பட்டு, மேற்படி கட்டிடத்தை மூடி முத்திரையிடவும் மற்றும் கட்டிடத்திலிருந்து வெளியேறுவதற்கான (De-occupation) அறிவிப்பும் வழங்கப்பட்டதென்றும், அதனைத் தொடர்ந்து M/S. சங்கர் ஐ.ஏ.எஸ். அகாடமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலரிடம் மேல்முறையீடு செய்துள்ளார் என்றும். இந்நிலையில் முறையீட்டு மனுதாரர் M/S. சங்கர் ஐ.ஏ.எஸ். அகாடமி உள்ளிட்ட 21 நபர்கள் மீது மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு W.P.No.23067/2016-ன் படி வழக்கு தொடர்ந்துள்ளார் என்றும் இவ்வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலர் M/S. சங்கர் ஐ.ஏ.எஸ். அகாடமியின் மேல் முறையீட்டு மனு மீது கீழ்க்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

> **"8. It is observed that the petitioner has stated to have added additional land purchased on 1st February 2017 vide document No.209 of 2017 adjoining the southern side of the site under reference. Small structure available in the additionally purchased land will be removed and it shall be kept as a vacant site. Further, he has promised to remove 73.8 m2 of built up area in the stilt floor and 79.82 m2 in the terrace. After doing so in the site, existing structure will become as stilt+2 floors structure having a built up area only 249.78 m2.**
>
> **9. The Government after careful consideration of facts and submissions stated above, hereby grant six months time to the appellant to rectify the defects since, as represented by the petitioner, his institute is providing welfare services to various weaker sections of the population including programmes approved by the Government of Andhra Pradesh, Ministry of Social Justice and Empowerment, Government of India etc.**
>
> **10. The Member Secretary, Chennai Metropolitan Development Authority / The Commissioner, Grater Chennai Corporation is directed to pursue action accordingly........"**

மேலும், மண்டல அலுவலர் தனது அறிக்கையில் M/s. சங்கர் ஐ.ஏ.எஸ். அகாடமி உரிமையாளர் தனது 27.07.2017 நாளிட்ட கடிதத்தில் அரசு செயலரின் உத்தரவின்படி stilt floor மற்றும் மூன்றாவது மாடி கட்டுமானம் அகற்றப்பட்டுள்ளது என தெரிவித்து அதற்கான புகைப்படங்களை

சமர்ப்பித்துள்ளார் என்றும், முறையீட்டு மனுதாரரால் மாண்பமை, சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு W.P.No.23067/2016 மற்றும் W.M.P.No.7149/2017ன் மீது 08.08.2019 அன்று மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு தீர்ப்புரை வழங்கியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

**"3. The learned counsel for the respondents Corporation stated that in relation to the said unauthorized construction, they have issued locking and sealing notice dated 09.11.2016 under Sections 56 and 57 read with Section 85 of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 and thereafter, de-occupation notice dated 28.12.2016 has also been issued. After the respondents 5 to 21 received the said notices, they have preferred appeals, which are pending before the Government.**

**4. Thus, it is seen that the authorities have been taking action against the unauthorized construction put up by respondent nos. 5 to 21. Hence, no further orders are necessary at this stage. "**

இம்முறைமன்ற நடுவத்தின் 25.09.2019 நாளிட்ட அறிவிப்பாணையின்படி, முறையீட்டு மனுதாரர் திரு எஸ். திருவேங்கடம், 20.11.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் "சென்னை, அடையாறு பத்மநாப நகர் 3வது தெரு, கதவு எண்.2/23–இல் சங்கர் ஐ.ஏ.எஸ். அகாடமி என்ற நிறுவனம் 2013–இல் கிரையம் பெற்று அந்த பழைய கட்டிடத்தை அகற்றிவிட்டு ஒரு புது கட்டிடம் கட்டினார்கள் என்றும், அவர்கள் மாநகராட்சி 13 வது மண்டலத்தில் பெற்ற அனுமதியில் முதல் இரண்டு தளம் மட்டும் கட்டுவதற்கு அனுமதி பெற்றார்கள் என்றும் , ஆனால் மூன்றாவது தளமும் கட்டிவிட்டார்கள் என்றும், மேலும் பக்கவாட்டில் ஒதுக்கவேண்டிய காலியிடம் ஒதுக்கப்படவில்லை என்றும், விதிகளின் படி ஒதுக்கப்படவேண்டிய அளவு பக்கவாட்டில் ஒதுக்கப்படவேயில்லை என்றும், மேலும், கட்டிடம் கட்டிட அனுமதி பெறும் போது குடியிருப்பிற்கான அனுமதி வாங்கி உள்ளார்கள் என்றும், ஆனால் தற்போது அது வணிக நோக்கில் பயன்படுத்தப்படுகிறது என்றும், தற்பொழுது மேற்படி நிறுவனம் அரசு செயலர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைக்கு மேல்முறையீடு செய்தார்கள் என்றும், அரசு கடிதத்தில் அவர்களுக்கு கட்டிடத்தை விதிகளின் படி கட்டிடத்தின் குறைகளை சரி செய்வதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் 28.08.2017–இல் முடிந்துவிட்ட நிலையிலும் சென்னை மாநகராட்சி அலுவலர்கள் எந்தவித சட்டபூர்வ நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், தனது 30.10.2018 நாளிட்ட கடிதத்தில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிட்டு கடிதம் அனுப்பி 10 மாதங்கள் ஆகியும், சென்னை மாநகராட்சி 13 வது மண்டல செயற்பொறியாளர் விதிகளை தவறு செய்பவர்களோடு கைகோர்த்து செயல்படுவதாக கருதுவதாகவும் எனவே, விதிகளை மீறி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் கடிதம் அனுப்பிய பின்பும் நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இந்த விதிமீறல் காரணமாக, சுற்றியிருக்கும் வீடுகளுக்கு போதிய காற்று மற்றும் வெளிச்சம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் தான் குடியிருக்கும் பகுதியில் உள்ள குடியிருப்போர் சங்கத்தினுடைய செயலாளராக இருப்பதாகவும் தெரிவித்தார்".

இம்முறைமன்ற நடுவத்தின் 25.09.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி பெருநகர சென்னை மாநகராட்சி 13வது மண்டல செயற்பொறியாளர் 20.11.2019 அன்று விசாரணக்கு

ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் தான் கடந்த இரண்டு ஆண்டு காலமாக பெருநகர சென்னை மாநகராட்சியில் செயற்பொறியாளராக 13வது மண்டலத்தில் பணிபுரிந்து வருகிறேன் என்றும், திரு எஸ். திருவேங்கடம் என்பவரின்14.09.2019 நாளிட்ட புகார் மனு விவரம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அனுப்பிய நகலின் பிரதி பார்த்து அறிந்து கொண்டேன் என்றும் இது குறித்து மண்டல அலுவலருடைய 18.11.2019 நாளிட்ட அறிக்கை தற்போது நேரில் சமர்ப்பிக்கின்றேன் என்றும், சங்கர் ஐ.ஏ.எஸ். அகாடமி கட்டிட விதிமீறல்கள் குறித்து மனுதாரர் திரு எஸ்.திருவேங்கடம் தாக்கல் செய்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற முதல் அமர்வு நாள் 08.08.2019 அன்று அளித்த தீர்ப்பில் மாநகராட்சி சார்பாக 09.11.2016–இல் கட்டிடத்தை பூட்டி சீல் வைப்பதற்கு அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கு பிறகு 28.12.2016–இல் குடியிருப்பவர்கள் வெளியேற்றப்படுவதற்கு உரிய அறிவிப்பு இடம் பெற்ற அறிவிப்பை எதிர்மனுதாரர்கள் (5 முதல் 21 வரை உள்ளவர்கள்) பெற்றுள்ளார்கள் எனவும், இவற்றை பார்க்கும்போது சம்பந்தப்பட்ட அலுவலர்கள் இந்த கட்டிடத்தின் மீது உரிய நடவடிக்கை எடுத்து உள்ளார்கள் எனவும், எனவே, இந்த நிலையில் இதற்கு மேல் வேறு ஆணைகள் இடவேண்டிய அவசியம் இல்லை என உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், அதற்கு பிறகு மனுதாரர் மீண்டும் ஒரு மனு அளித்தார் என்றும், அந்த மனு அடிப்படையில் மீண்டும் ஆய்வு நடத்தப்பட்டது என்றும், ஆய்வின் முடிவில் தரைப்பகுதியில் தற்காலிக மரம் மற்றும் கண்ணாடிகளான ஒரு அலுவலகம் மற்றும் வரவேற்பு அறை 44 சதுர மீட்டரில் கட்டப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது என்றும், எனவே, 04.10.2019–இல் புதிய விதிகளின் கீழ் அந்த பகுதியில் இருந்து காலி செய்வதற்கான அறிவிப்பு அனுப்பப்பட்டதென்றும் அதில் 15 நாட்கள் அவகாசம் அளிக்கப்பட்டதென்றும் கட்டிட உரிமையாளர் திருமதி வைஷ்ணவி 12.10.2019–இல் ஒரு மனு அளித்துள்ளார்கள் எனவும், அதில் அவர்கள் அடையாறு கதவு எண்.2/23 மற்றும் 2/22 பத்மநாப நகர் 3வது தெருவில் உள்ள இடம் சம்மந்தமாக ஏற்கனவே குடியிருப்பதற்கு அனுமதி பெற்றதை மாற்றி வணிக பகுதியாக ஆணையிடுவதற்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு மனு செய்யப்பட்டு New Indian Express 13.08.2019–இல் அது பிரசுரம் ஆகி உள்ளதெனவும், இதற்குரிய குழு கூட்டம் 25.09.2019–இல் நடத்தப்பட்டுள்ளதென்றும் அதில் சில விளக்கங்களை கோரப்பட்டுள்ளதாகவும் அந்த விளக்கங்கள் திருமதி வைஷ்ணவி அவர்களால் அளிக்கப்பட்டு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தில் இன்னும் நிலுவையில் உள்ளதென்றும், அனேகமாக டிசம்பர் மாதத்திற்குள் அந்த பணி நிறைவடைய உள்ளதால் அதுவரை கால அவகாசம் கோரியுள்ளார் என்றும், மாணவர்கள் எதிர்காலத்தை காரணம் காட்டி கால அவகாசம் கோரியுள்ளார்கள் என்றும், அரசு ஆணையில் 8 இனங்களில் விதி மீறல்கள் சரி செய்யுமாறு ஆணையிடப்பட்டது என்றும், தன்னால் இந்த பயிற்சி நிறுவனம் கட்டிடம் ஆய்வு செய்யப்பட்டது என்றும், 26.11.2019 அன்று பிற்பகல் 3 மணிக்கு மற்றும் அதன் தொடர்ச்சியாக எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்களுடன் ஆஜராகி சாட்சி அளிக்கிறேன் என்று தெரிவித்தார்.

இம்முறைமன்ற நடுவத்தின் அழைப்பாணையின்படி பெருநகர சென்னை மாநகராட்சி 13வது மண்டல செயற்பொறியாளர் 26.11.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் 20.11.2019 அன்று விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தை தொடர்ந்து சில கூடுதல் விவரங்கள் சமர்ப்பிக்குமாறு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் ஆணையிட்டதின் அடிப்படையில் இன்றைய தினம் போதிய விவரங்களுடன் ஒரு அறிக்கையை இன்று நேரில் ஆஜராகி சமர்ப்பித்துள்ளேன் என தெரிவித்துக்கொள்வதாகவும், இதையே தன்னுடைய வாக்குமூலமாக பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

இம்முறைமன்ற நடுவத்தின் அழைப்பாணையின்படி 03.01.2020 அன்று M/s. சங்கர் ஐ.ஏ.எஸ். அகாடமியின் உரிமையாளர் விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் சென்னை அண்ணாநகரில் M/s. சங்கர் ஐ.ஏ.எஸ். அகாடமி முதன்மை கல்வி நிலையம் உள்ளது என்றும், அடையாறு, பெருநகர சென்னை மாநகராட்சி, 13வது மண்டலத்தில் கதவு எண்.2/23

பத்மநாபா நகர் 3வது தெருவில் எங்களது M/s. சங்கர் ஐ.ஏ.எஸ். அகாடமி உடைய கிளை இயங்கி வருகிறது என்றும், 2016–ஆம் ஆண்டு ஒரு பழைய வீட்டை வாங்கி அந்த கட்டடத்தை இடிப்பதற்கு உரிய அனுமதி பெருநகர சென்னை மாநகராட்சியில் பெறப்பட்டு புதிய கட்டிடம் கட்டப்பட்டது என்றும், அக்கட்டிடத்தில் மூன்று தளங்கள் கட்டப்பட்டது என்றும், மூன்றாவது தளத்திற்கு அனுமதி பெறப்படவில்லை என்பதால் மூன்றாவது தளம் மாநகராட்சி மண்டல அலுவலரிடம் இருந்து எனக்கு வந்த அறிவிப்பின்படி மூன்றாவது தளம் இடிக்கப்பட்டுவிட்டது என்றும், கீழே தரைதளத்தில் அலுவலகம் இருந்தது என்றும், அது கார் நிறுத்தும் இடம் என்பதால் அந்த கட்டிடமும் இடிக்கப்பட்டு தற்காலிகமாக ஒரு அறை தற்போது உருவாக்கப்பட்டது என்றும், மாநகராட்சி 09.11.2016–இல் கட்டிடத்தை பூட்டி சீல் வைப்பதற்கு அறிவிப்பு அனுப்பியதன் அடிப்படையில் எங்களால் அரசுக்கு 29.11.2016–இல் மனு செய்யப்பட்டுள்ளது என்றும், அதன் மீது அரசு கடிதம் எண்.24554, நாள் 28.07.2017–இல் சில குறைபாடுகள் சுட்டிக் காட்டி சரி செய்ய ஆணையிடப்பட்டதென்றும், பக்கவாட்டில் சட்டபூர்வமாக விட வேண்டிய இடம் குறைவாக இருந்ததால் அதை சரி செய்வதற்காக பக்கத்து நிலத்தையும் வாங்கி அது பழைய கட்டிடம் என்பதால் சுற்று சுவரை அப்புறப்படுத்தி அந்த கட்டிடத்திற்கு தேவையான பக்கவாட்டில் காலி பகுதியாக காட்டப்பட்டது என்றும், குடியிருப்பு பகுதியிலிருந்து கல்விநிலைய பகுதியாக மாற்றுவதற்கு மனு செய்யப்பட்டு 20.11.2019–இல் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் ஒப்புதல் அளிக்கப்பட்டது என்றும், நில உபயோக மாற்றம் குறித்து பத்திரிக்கை செய்தி 26.11.2019 அன்று வந்துள்ளதென்றும், அந்த நகலும் இத்துடன் சமர்ப்பித்துள்ளேன் என்றும், தொழில்நுட்ப குழு ஆய்வு செய்து சரி என பரிந்துரை செய்துள்ளார்கள் என்றும் மீண்டும் பெருநகர சென்னை வளர்ச்சி குழுமத்தால் சில விவரங்கள் கோரி உள்ளதால் அந்த விவரங்களும் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது என்றும், நில பயன்பாடு வகை மாறுதல் குறித்து புதிதாக கட்டிடம் கட்டி அதில் முழுவதும் விதிகளின்படி அது சரி செய்யப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும், தமிழ்நாடு மாநில அரசு பணியாளர் தேர்வுக்கு படிக்கும் 100 மாணவர்கள் தினமும் மாலையில் 5 மணி முதல் 8.30 வரை வகுப்புகள் நடக்கும் என்றும், மத்திய தேர்வு சம்பந்தமாக படிக்கும் 140 நபர்களுக்கு வார இறுதி நாட்களில் வகுப்புகள் நடக்கும் என்றும் தெருவில் தங்களது மாணவர்கள் யாரும் வாகனங்களை நிறுத்துவது இல்லை என்றும் தெரிவித்தார்.

மேலும், தங்களது கல்வி நிறுவனத்திற்கு நேர் எதிரே சிஷியா பள்ளி இருக்கிறது என்றும், அங்கு படிக்கும் குழந்தைகள் பள்ளிக்கு வரும்பொழுதும் பள்ளி முடிந்து அழைத்துசெல்லும் போது இடைஞ்சலாக உள்ளது என்றும், தங்களது நிறுவனத்திற்கு வரும் மாணவர்கள் கட்டிடத்திற்கு முன்பு தெருவில், யாரும் வாகனங்களை நிறுத்தக்கூடாது என அறிவுரை வழங்கப்பட்டதென்றும், மாணவர்கள் யாரும் தெருவில் வாகனங்களை நிறுத்துவது இல்லை என்றும், உரிய அனுமதி எல்லாம் பெறுவதற்கு மூன்று மாதங்கள் ஆகும் என்றும், இடையில் கட்டிடத்திற்கு ஏதாவது இடைஞ்சல் ஏற்பட்டால் மாணவர்களுடைய நலன் பாதிக்கப்படும் என்றும், எனவே, அதுவரை கால அவகாசம் அளிக்குமாறு கேட்டுக்கொள்வதாகவும் மனுதாரர் திரு. திருவேங்கடம் சென்னை உயர்நீதிமன்றத்தில் இது குறித்து வழக்கு தொடர்ந்துள்ளார் என்றும், இவ்வழக்கில் 08.08.2019 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டதென்றும், அந்த தீர்ப்பின் மீது மறு ஆய்வு மனு, மனுதாரர் திரு.திருவேங்கடம் அவர்களால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சியின் 13வது மண்டல அலுவலரின் அறிக்கைகள், 13வது மண்டல செயற்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் முறையீட்டு மனுதாரரால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ள M/s. சங்கர் ஐ.ஏ.எஸ். அகாடமியின் உரிமையாளர் விசாரணையின் போது அளித்த வாக்குமூலம் ஆகியவைகள் பரிசீலிக்கப்பட்டு, முறையீட்டு மனுதாரரின் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டிடத்தின் அனுமதியற்ற கட்டுமானம் மற்றும் விதிமீறல் கட்டுமானம் தொடர்பாக மேல்முறையீடு அரசிடம்

பரிசீலனையில் இருந்து வருகிறது என்றும், கட்டிட உரிமையாளரால் குடியிருப்பு பகுதி நில வகைபாட்டிலிருந்து கல்வி நிலைய நில வகைபாட்டிற்கு மாற்றம் செய்வதற்கு பெருநகர சென்னை வளர்ச்சி குழுமத்திடம் மனு கொடுக்கப்பட்டு நடவடிக்கையில் இருந்து வருகிறதென்பதும், முறையீட்டு மனுதாரர் வழக்கு W.P.No.23067/2016 மற்றும் W.M.P.No.7149/2017ன் மீது வழங்கப்பட்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்புரையின் மீது மறு ஆய்வு மனு (Review Petition) மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ளார் என்பதும் தெரியவருகிறது. முறையீட்டு மனுதாரரால் மாண்பமை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பு மற்றும் அரசின் பரிசீலனையில் இருந்து வரும் M/S. சங்கர் ஐ.ஏ.எஸ். அகாடமியின் உரிமையாளரின் முறையீட்டு மனு மீது வழங்கப்படும் உத்தரவு மற்றும் உரிய விதிமுறைகளின்படியும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு பரிந்துரை செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2021**– ஆம் ஆண்டு, **டிசம்பர்** திங்கள், **29** ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. **திரு S. திருவேங்கடம்,**
   **புதிய எண்.36, கலைமகள் நகர்,**
   **முதல் மெயின் ரோடு, ஈக்காட்டுத் தாங்கல்,**
   **சென்னை – 600 032.**

2. **மண்டல அலுவலர்,**
   **மண்டலம் –13, பெருநகர சென்னை மாநகராட்சி,**
   **எண்.115, டாக்டர் முத்துலட்சுமி சாலை, அடையார்,**
   **சென்னை – 600 020.**

3. **ஆணையாளர்,**
   **பெருநகர சென்னை மாநகராட்சி,**
   **ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.**

நகல் : **மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச்செயலர்,**
**இருப்பு கோப்பு/ உதிரி**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.